# மனுவுக்கு மனு!



செ.அன்புராசா

JPL
C13186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54

00 0112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
10 JUN 2020
மாநகரசபை
யாழ்ப்பாணம்

# மனுவுக்கு மனு!




KOHA JPL
1318 6CC

## செ. அன்புராசா

276732

வெளியீடு

முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்

276732 CC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
894.8111
10 JUN 2020

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : மனுவுக்கு மனு! |
| விடயம் | : கவிதை |
| நூல் ஆசிரியர் | : செ.அன்புராசா |
| வெளியீடு | : முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் |
| முதற்பதிப்பு | : ஐப்பசி, 2018 |
| வடிவமைப்பு | : ஜெயந்த் சென்ரர் |
| அச்சுப்பதிப்பு | : யே.எஸ்.பிறின்ரஸ் |
| பதிப்புரிமை | : ஆசிரியர் |
| அட்டை வடிவமைப்பு | : கி. வினுஷாந் |
| பக்கங்கள் | : xxiv + 88 |
| விலை | : 200 ரூபா |

| | |
|---|---|
| Title | : Manuvukku Manu! |
| Subject | : Poem |
| Author | : S.Anpurasa |
| Publisher | : Murunkan Muththamilk Kalamandram |
| First Edition | : October, 2018 |
| Layout | : Jeyanth Centre |
| Printed by | : J.S Printers |
| Copy Right | : Author |
| Cover Design | : K. Vinushanth |
| Pages | : xxiv + 88 |
| Price | : 200 Rs |

ISBN 978-955-4609-04-4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
10 JUN 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்

மனுவுடன் மனு
நடந்துகொள்ளும் நிலைகண்டு
மனுவுக்கு – ஒரு
மனுக் கொடுக்கலாம் எனச் சிந்தித்தேன்!
அதன் வெளிப்பாடுதான்
'மனுவுக்கு மனு!'

என் அன்புச் சகோதரிகள்
றேஹானே ஜப்பாரி,
வித்தியா,
கிருசாந்தி...
போன்றோருக்கு அர்ப்பணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான நோக்கில் வித்தியாசமானதொரு கவிதைத் தொகுப்பு!

சிறுவர் பாடல் (சிறகடிக்கும் சிட்டுக்கள், வாழத்துடிக்கும் வடலிகள்), பத்தி எழுத்து (அதிர்வுகள், அதிர்வுகள் 02, திருப்பத் திற்கான தேடல்கள்) சார்ந்த துறைகளில் வித்தியாசமான தொகுப்புகளை வெளியிட்ட அன்புராசா அவர்கள் இத்தொகுப் பினூடாக இப்போது நவீன கவிதைத்துறையிலும் வித்தியாசமான தொரு தொகுப்பினை இனங்காட்டியுள்ளார். அதுபற்றி இவ்வேளை எடுத்துரைப்பது பொருத்தமானதென்று கருதுகின்றேன்.

நவீன கவிதை முன்னோடியான பாரதி மனித நடத்தைக் கோலங்கள் பற்றியும் அவ்வப்போது விமர்சிப்பதுண்டு. பேராசிரியர் கைலாசபதியுட்பட புலமையாளர் பலருக்கும் பிடித்த பின்வரும் பாடற்பகுதி அவ்விதத்தில் பிரசித்தமானது:

*“தேடிச் சோறு நிதம் தின்று - பல*
*சின்னஞ்சிறு கதைகள் பேசி*
*வாடித் துன்பம் மிக உழன்று - பிறர்*
*வாடப் பல செயல்கள் புரிந்து - நரை*
*கூடிக் கிழப்பருவமெய்தி - கொடுங்*
*கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - அந்த*
*வேடிக்கை மனிதரைப்போல் - நானும்*
*வீழ்வேனென்று நினைத்தாயா?”*

மேலே பொதுவான மனித நடத்தைக் கோலம்பற்றிப் பேசிய பாரதி, இந்திய விடுதலை நோக்கில் மேலும் பல இடங்களில் விரிவாக அதுபற்றி விமர்சித்துமுள்ளார்.

**பேராசிரியர் செ.யோகராசா**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமுல்லை, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பரம்பரையினரான அன்புராசாவும் இக்கவிதை நூலின் முக்கியமான பேசுபொருளாக, பல்வேறு மனித நடத்தைக் கோலங்களை பலவேறு நோக்கிலும் போக்கிலும் விமர்சித்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதுவே, இந்நூலின் தனித்துவமாகக் காணப்படு கின்றது. 'மனுவுக்கு மனு!' என்ற தலைப்பே அதனை உணர்த்தி நிற்கின்றது. அதுபற்றி கவிஞர் பின்வருமாறு குறிப்பிடுவதும் கவனிக் கத்தக்கது: " 'மனு' என்ற சொல் மனிதனையும், குறை அல்லது புகார் தெரிவித்து எழுதும் கடிதத்தினையும் குறிக்கின்றது... மனிதனின் நடத்தைக் கோலங்களை அவதானிக்கின்றபோது அவை மனிதனின் இருப்புக்கு முரணான ஒன்றாகவே தெரிகின்றது. அதனால், மனுவுடன் மனு நடந்துகொள்ளும் நிலைகண்டு, மனுவுக்கு ஒரு மனுக்கொடுக்கலாம் எனச் சிந்தித்தேன்."

மேற்கூறிய வழியில் பொதுவான மனித நடத்தைக் கோலங்களையும் சமூக, அரசியல், பண்பாட்டுப் பின்புலத்தில் ஈழத்தவரது நடத்தைக் கோலங்களையும் கவனத்திற் கொள்கின்றார் கவிஞர்.

அன்றாட, பொதுவான மனித நடத்தைக் கோலங்களைக் கூர்மையாக அவதானித்துள்ள கவிஞர் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி அவற்றைப் படம்பிடிக்கின்றார். மனிதர்கள் அடிக்கடி பயன்படுத்தும் சொற்றொடர்களைப் பயன்படுத்துவது அவற்றி லொரு உத்திமுறை. உதாரணம்: "உன் 'இந்தா'வின் காலம் எவ்வளவோ?"

*கடந்த ஆண்டு,*
*"இந்தா வாறன்" என்றாய்!*
*இதுவரையில் நீ வந்ததில்லை!*
*கடந்த மாதம்,*
*"இந்தா தாறன்" என்றாய்!*
*இதுவரையில் எதுவும் தந்ததில்லை!*
*கடந்த வாரம்,*
*"இந்தா எடுக்கிறன்" என்றாய்!*
*இதுவரையில் தொடர்பு கொண்டதில்லை!*
*கடந்த நாளில்,*
*"இந்தா பாக்கிறன்" என்றாய்!*
*இதுவரையில் உன் பதிலில்லை!*
*உன் 'இந்தா'வின் காலம்*
*எதுவரையோ?*

பொது சன நூலகம்
10 JUN 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறான மனித செயற்பாடுகளை வீச்சான மொழியில் நிரல்படுத்திக் கூறுவது, பிறிதொன்று. உதாரணம்: "ஒருத்தருக்கும் ஓதிப்போடாத உனக்கு மட்டும்தான்!" என்ற கவிதையாகும்.

அன்றாட சம்பவங்களூடாக வெளிப்படுத்துவது பிறிதொரு உத்தி. உதாரணம்: "நாய்களுக்குச் சுதந்திரம்!"

*உறங்கிக்போய்க் கிடக்கிறது ஊர்!*
*ஆனால்,*
*நாலாபக்கமும்*
*நாய்கள் மட்டும்*
*நடமாடித்திரிகின்றன!*

இவ்வாறே, மனிதரை விளித்து கேள்விகள் கேட்டுச் சிந்திக்கத் தூண்டுவது, மற்றொரு உத்தி. உதாரணம்: "உனக்கே நல்லாயிருக்கா?"

*"நண்பா...!*
*'வெசாக்' வந்ததும்,*
*எம் விருப்பம் இன்றியே,*
*எம்மை வழிமறித்து,*
*ஆளடையாளம் தெரியாமலேயே,*
*பாற்சோறு தந்து,*
*பழரசம் பரிமாறுகிறாய்!*
*'வெசாக்' முடிந்தமும்,*
*எம் விருப்பம் இன்றியே,*
*எம்மை வழிமறித்து,*
*ஆளடையாள அட்டை கேட்டு*
*பதிகிறாய்...*
*பரிசோதிக்கிறாய்...*
*இது உனக்கே நல்லாயிருக்கா?"*

உளப்பாட்டுத் தன்மைப் பன்மையில் கூறுவது வேறொரு, உத்தி. உதாரணம்: 'தேசப்பற்று!' என்ற கவிதை.

அஃறிணைப் பொருட்களே தம்மைப்பற்றிக் கூறுவது இன்னொரு உத்தி. உதாரணம்: 'கதிரைகள் கூடிக் கதைத்துக் கொண்டன!'

சில செயற்பாடுகளை சர்வதேச நோக்கில் பார்ப்பதுமுண்டு. 'அதுவே நடந்தது' என்ற கவிதை அத்தகையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"அன்று நடந்ததே*
*எங்கள் மண்ணிலும் நடந்தது!*

*இயேசுவுடன்*
*யூதாஸ்!*

*சீசருடன்*
*புறூட்டஸ்!*

*கட்டபொம்மனுடன்*
*எட்டப்பன்!*

*பண்டாரவன்னியனுடன்*
*காக்கைவன்னியன்!*

*எது நடந்ததோ*
*எங்கள் மண்ணிலும்*
*அதுவே நடந்தது!..."*

மேற்கூறியவை தவிர, வேறுபல உத்திகளும் கையாளப் படுகின்றன. விரிவஞ்சி அவைபற்றிப் பேசவில்லை. இத்தகைய உத்திமுறைகள் காரணமாக இவற்றை வாசிக்கும் இலக்கிய ஆர்வலருக்குச் சலிப்பேற்படுவது தவிர்க்கப்படுகின்றது என்பதே கவனத்திற்குரியது.

மேற்குறிப்பிட்டவாறு பொதுவான நடத்தைக் கோலங்கள் ஒருபுறமாக இருக்க, ஈழத்தவரது சமூக, அரசியல், பண்பாட்டுப் பின்புலத்தில் எழுகின்ற நடத்தைக் கோலங்கள் சார்ந்த கவிதைகள் பற்றியும் சில கூறவேண்டியுள்ளது.

ஈழத் தமிழ்ச் சமூகத்தினது பிரச்சினைகள் பல, கவிஞரது கவனத்திற்குட்படுகின்றன. 'சாதியம்' தொடர்பான பல கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் சில முற்றிலும் புதிய நோக்கில் சிந்திக்கத் தூண்டுவனவாக அன்புராசாவால் படைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று, 'மனித சாதி!' என்ற தலைப்பில் வரையப்பட்டுள்ளது.

*'எச்சாதி இவன்சாதி?'*
*என்றொருவர் எனைக் கேட்டார்!*

*'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா*
*வைத்தியம் செய்கிறாய்?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா*
*இரத்ததானம் கேட்கிறாய்?*

*'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா*
*நல்லாசிரியனைத் தேடுகிறாய்?*

*'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா*
*சலுகைக்காய் ஏங்குகிறாய்?*

*'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா*
*உதவிக்கு அழைக்கிறாய்?*

*'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா*
*கடனுக்காய் கையேந்திறாய்?*

*'எச்சாதி இவன்சாதி' எனப் பார்த்தா*
*வாக்குப்பிச்சை கேட்கிறாய்?*

*'எச்சாதி இவன்சாதி?' என்றவருக்கு*
*"எச்சாதி உன்சாதி*
*அச்சாதி அவன்சாதி"*
*என்பதுதான் என்பதில்!*

சில கடுங் கணைகளாக, வெளிப்படுகின்றன. "சோசலிசமும் சாதிசமும்!" அத்தகையவற்றில் ஒன்று.

*"எங்கள் நாட்டில்தான்*
*கூடியிருந்து*
*குடிக்கும்போது*
*'சோசலிசம்' பேசுவார்கள்!*
*விடிந்ததும்*
*வெறிமுறிந்ததும்*
*'சாதிசம்' பார்ப்பார்கள்!"*

சீதனப் பிரச்சினை, அதிஷ்ட எண், மூடநம்பிக்கை முதலியவும் கவனத்திற்குட்படுகின்றன.

இவ்வாறே, கொழும்பிலுள்ள பலரும் கவனிக்கின்ற - எழுத்தாளர்கள் பலரும் கவனிக்காத - சமகால சமூக நிலைமாற்றங்களும் கவிஞரது பார்வைக்குட்பட்டுள்ளமை பாராட்டிற்குரியதாகின்றது. உதாரணம்: 'மேட் இன் சைனா'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"ஈரைந்து ஆண்டுகள்*
*இடைவிடாத் தவத்தினால்*
*பெற்றனர் ஓர் பிள்ளையை!*

*குழுமினர் குடும்பத்தினர்!*
*குதூகலித்தனர் சுற்றத்தினர்!*
*கோபுரம்போல் குவிந்தன*
*பரிசுப் பொருள்கள்!*

*ஊடறுத்துப் பார்த்த கண்கள்*
*ஒன்றை மட்டும்*
*உன்னிப்பாய் உணர்த்தின!*
*குழந்தையைத் தவிர*
*மற்ற அனைத்தும்*
*'மேட் இன் சைனா!'*

*நாட்டில்*
*சீனர் நடமாட்டத்தை*
*அவதானிக்கும்போது,*
*'காலப்போக்கில்*
*அதற்கும் என்னாகுமோ!' என*
*ஏங்குகிறது மனம்!"*

சமகால ஈழத்து அரசியல் பிரச்சினைகள் பற்றியும் பல கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக, போர்க்காலத்திலும் பின்னருமான இராணுவத்தினரின் முரண் நடத்தைகள் கவிஞரது ஷெல்வீச்சுக்குள்ளாவது குறிப்பிடத்தக்கது.

ஆக, வித்தியாசமான நோக்கில் வித்தியாசமானதொரு தொகுப்பைத் தந்துள்ள கவிஞர் மிகுந்த பாராட்டுக்குரியவர் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக, நட்பார்ந்ததொரு வேண்டுகோள்: மனித நடத்தைக் கோலங்கள் பலவும் 'கோலங்க'ளாக வெளிப்பட்டிருப் பினும் சில 'கோடுக'ளாக வெளிப்பட்டிருக்கின்றன.

கவிதைகள் பலவும் உணர்ச்சிக்கும் அறிவுக்கும் விருந் தளிக்கின்றன. எனினும் சில அறிவுக்கு மட்டுமே விருந்தாகின்றன. மேற்கூறியவை எதிர்காலத்தில் தவிர்க்கப்படுமாயின் இக்கவிஞரது இருப்பு மென்மேலும் வலுவடையுமென்று நம்புகின்றேன். வாழ்த்துக்கள். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கியோனை, வாசகனை ஆற்றுப்படுத்துகின்ற கவிதைகள்

இலக்கியத்தை ஒருபோதும் வாழ்வில் இருந்து பிரிக்கமுடியாது. உயிரோட்டமுள்ள ஒரு வாழ்க்கைத் தரிசனந்தான் சிறந்த இலக்கியம். தன்னை நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதித்த அநுபவங்களையே ஒரு கலைஞன் படைப்புப் பொருளாகக் கொண்டு வருகிறான். ஆன்மாவில் பட்ட காயங்கள் ஆற வேண்டுந்தானே! கவிதை ஆக்கியோனையும் ஆற்றுப்படுத்தும், வாசகனையும் ஆற்றுப்படுத்தும்.

'நகரத்துக் குப்பைகள்' என்ற கவிதையில் அருட்திரு செ.அன்புராசா அடிகளார் அவர்கள் ஒருவருக்குத் தெரியாமல் மற்றொருவர் வீசும் வெறும் கஞ்சல் குப்பைகளை மட்டும் குறிப்பிடவில்லை. ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் ஒருவருக்குத் தெரியாமல் மற்றவர் சமூகத்தினுள் வீசி விடுகின்ற பொய்கள், கட்டுக்கதைகள், சரித்திர மறுதலிப்புகள் என்னும் குப்பைகள் எவ்வாறு மானிட சமூகத்தின் இருப்பையே கேள்விக் குறியாக்கி விடுகின்றது என்று திகைத்துப் போகிறோம். ஏறத்தாழ இதே அநுபவம், 'உண்மையாச் சொல்வது உண்மைதானா?', 'உன் இந்தாவின் காலந்தான் எவ்வளவோ?' ஆகிய கவிதைகளிலும் இணைந்து கொள்கிறது.

புனைவுகளை உருவாக்கி மற்றவர்களை நம்பச் செய்து ஏமாற்றிப் பணம் சேர்ப்பது இன்று பெரும் 'கலை'யாகிவிட்டது. 'இரகசியம் காத்தல்' என்ற ஒழுக்கப் பண்பைக் கட்டாயம் கொண்டிருக்கவேண்டிய சமூக உளவியல் பணியாளர்கள்கூட மனிதர்களை அவமதிக்கும் கதைகளைத் தாமே உருவாக்கி,

**திருமதி கோகிலா மகேந்திரன்**
கலாபூஷணம், இலக்கிய வித்தகர்,
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒருத்தருக்கும் ஓதிப் போடாதை, ஒருத்தருக்கும் ஓதிப்போடாதை' என்று பலருக்குப் பரப்பும் சங்கதிகள் நாம் அறிந்தவையே. கவிதை எழுதுவது, சிறுகதை, நாவல் எழுதுவது எல்லாம் 'கலை' என்று நம்ப மனிதர்கள் தயாராக இல்லை.

"ஒருவர் தனது சூழலை எவ்வாறு எதிர் கொள்கிறார்?", "தனது சூழலை எவ்வாறு விளங்கிக்கொள்ள முற்படுகிறார்" என்பது அவரது தனிமனித சமூக உறவை நிர்ணயிக்கும். அது அவரது நடத்தையில் புலனாகும். எமது நாட்டின் பேருந்து பயண அநுபவங்கள் பல விதத்திலும் கொடுமையானவை. இது தொடர்பான எனது பார்வையை நானும் இரண்டு, மூன்று சிறுகதைகளில் வெளிப்படுத்தியுள்ளேன். அவுஸ்திரேலியா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் சக்கர நாற்காலிப் பயணிகள் மிக விசேடமாகவே கவனிக்கப்படுவதைப் பார்க்கலாம். அவர்களுக்கான இருக்கையில் வேறு யாரும் அமரவே மாட்டார்கள். எமது நாட்டில் இது கனவு! 'ஆர் வந்தாலும் அசைய மாட்டம்!' என்ற அடிகளாரின் கவிதை இதைப் பேசுகிறது. "போதையோடு, வாளோடு வந்தால் உடனே எழுவோம்" என்று கவிதை முடிந்திருக்கலாமோ என்று தோன்றியது. வன்முறைக்குத்தான் எமது மதிப்பும் பயமும்!

பயம்! பயந்தான் கொடுமைகளின் அடிநாதம்! பாம்பு, தான் பயந்தால் சும்மா நிற்பவரையும் தொத்திச் சாகடித்துவிடும். நாங்கள் செத்தவர்களுக்கும் பயம். அதுதான் துயிலும் இல்லங்களில் துயில்பவர்களையும் துப்பாக்கி முனையில் வைத்திருக்கிறோம்! "காவல்" என்ற கவிதை அருமையாய்ச் சொல்கிறது.

'தேசப்பற்று' என்ற கவிதை எமது இளமைக்கால வாழ்வை மனக் கண்முன் நிறுத்தியது. "இப்படித்தான் வாழ வேண்டும்" என்ற சிலர், "எப்படியும் வாழலாம்" என்ற சிலர் பற்றி, அப்போது முனைவர் மு.வ. அவர்களின் நூல்களில் படித்தது மட்டுமில்லை, சூழலில், "இப்படித்தான் வாழவேண்டும்" என்று செம்மையாக வாழ்ந்தவர்கள் மதிப்பளிக்கப்பட்டதையும் கண்டோம். அநுபவித் தோம். இலக்கியங்களில், நாடகங்களில், கலைகளில் கதாபாத் திரங்கள் சிறப்பான பண்புகளுடன் படைக்கப்பட்டன. இன்று சின்னத் திரை சொல்லித் தருகிறது, "எப்படியும் வாழலாம்" என்று! எப்படியாவது வாழ்ந்து பணம் சேர்த்தோர் மதிக்கப்படவும் செய்தனர். 'தேசப்பற்று' என்ற சொல்லையே அகராதியில் இருந்து எடுத்து விட்டால் என்ன?

'இறுதிப்பயணம்' என்ற கவிதை நெஞ்சைத் தொட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலுப்புவது. ஆடுகளின் 'சேவ்ரி' ஓநாய்களின் கைகளில் இருக்கும்போது இறுதிப் பயணங்கள் இப்படித்தான் ஐயா இருக்கும். "இரண்டுபேர் மட்டுமே திரும்பினோம், அதுவும் நடைப்பிணங்களாய்" என்று அருட்தந்தை நிறைவு செய்கிறார். மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவங்கள் பலவற்றை அநுபவித்து, நெருக் கீட்டுக்குப் பிற்பட்ட மனவடுவுடன் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள், "நடைப்பிணங்களாய்தான்" வாழுகின்றார்கள். அது அவர்களின் தவறல்ல. கொடிய சம்பவங்களின் தவறு. சம்பவங்கள் இன்னும் தொடர்கின்றன!

"மனமே நீ யார்?" என்று கவிஞர் கேட்கிறார். அது ஒவ்வொரு முறை ஒவ்வொரு மாதிரி உணர்வுக்குள் செல்லலாம். அனர்த்தங்கள் மன நலத்தில் செலுத்திய செல்வாக்கினால் மது, போதைப் பாவனை அதிகரித்துவிட்டது. அரசுக்கு வருமானமும் அதிகரித்துவிட்டது. அரசு வெளியே வேறு முகத்தைக் காட்டி, "உலகமே ஒரு நாடகமேடை" என்று நிறுவிக் கொண்டிருக்கிறது. "மதுச்சாலை பெருக மதியுரைத்து ஆதரிக்கும் நல்லாட்சி அரசுதான், போதைப் பொருளற்ற நாடென ஆக்க முனைவதாய் ஆணையிடு கின்றது" என்கிறார் அடிகள். "நித்திரைபோல நடப்பவர்களை என்னதான் செய்யலாம்?" பலருக்கு *personality disorder*. என்னதான் செய்வது?

அனர்த்த காலத்தில் எத்தனையோ விதமான இழப்புக்கள். அவர்களில் பலர் அந்த இழப்புத் துயரைக் கடந்து வாழத்துடிக்கிறார்கள். வேறு பலர் நுண்கடன் திட்டங்களில் அகப்பட்டுச் சில பொருள்களைச் சேர்த்தார்கள். இன்று கடன்காரன் அந்திசாயும்வேளை வந்து தொல்லை கொடுப்பது தாங்காமல் தற்கொலை செய்யத் துடிக்கின்றார்கள். இந்த நியதி பற்றியும் அன்புராசா அடிகளின் மனம் சஞ்சலம் கொள்கிறது.

பெற்றோர் இவ்வாறு பலவேறு பிரச்சினைகளில் அகப்பட்டுத் தவிக்க பிள்ளைகளின் தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை. அந்தப் பிள்ளைகளின் துயரைக் கலை நயத்துடன் கடதாசியில் எறிகிறது 'நவீன தாலாட்டு' என்ற கவிதை.

உலகம் அநீதிகளில் முற்றாக மூழ்கிவிடும்போது மனிதர்களிடையே போட்டி அதிகரித்துப் போகிறது. முந்தோ முந்து என்று முந்தி முந்தி இறுதியாக 30, 40, 50ஆண்டுகள் முந்திவிடும் நிலையை அடிகள் சொல்வது ரசிக்கும்படி இருக்கிறது. போட்டி கொண்டுவரும் பதற்றம், அதனால் வரும் உயர் குருதியமுக்கம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOI
JPL

நீரிழிவு, இதய நோய்கள் போன்ற தொற்றா நோய்களின் பெருக்கம், இறுதியில் வாழ்வுக்காலம் சரிதல் என்ற அவலநிலை பற்றிச் சிந்திக்க வைக்கிறார்.

"செவ்வாய்க் குற்றத்தில் பிறந்தது யார் குற்றம்?" என்று கேட்டு சமூக மூட நட்பிக்கைகள், கலாசார மைய நம்பிக்கைகளையும் தொட்டுக்காட்ட மறக்கவில்லை நூலாசிரியர்.

ஒரு பிள்ளையை ஒருநாள் பரீட்சைக்கு அனுப்பினாலே அது எத்தனை புள்ளி பெற்றது என அறியத்துடிப்பது தாயின் இயல்பு. அது உயிரின் உரிமை! கையில் ஒப்படைத்த தன் பிள்ளை என்ன ஆனான் என்று தெரியாத தவிப்புடன் ஒருநாளா, இரண்டு நாளா... எத்தனை வருடங்களை ஓட்டி விட்டாள் தாய்? பிசின்போல ஒட்டி ஒட்டி நீளும் பிரச்சினைக்கு முடிவு கட்டுவது யார்? யார் என்று யாருக்கும் தெரியவில்லை. அப்படியான நீதி! பசுக்கன்று இறந்தது என்று தன் பிள்ளையைத் தேர்க் காலில் இட்ட அரசன் பற்றிய இலக்கியங்களைக் கொண்ட நாட்டின் இன்றைய நீதி? அடிகள் அது பற்றிக் கலங்குகிறார்.

நாட்டின் எதிர்காலம் பற்றிய கவிஞரின் பயம் அல்லது கருத்து மிக அழகாய் ஒரு கவிதையில் வந்து விழுந்திருக்கிறது. குழந்தையைத் தவிர மற்ற அனைத்தும் *Made in China!* "காலப் போக்கில் அதற்கும் என்னாகுமோ" என்று கேட்கிறார். நாடு முற்றிலும் பௌத்த சிங்கள நாடாகிவிடும் என்பதற்கு அப்பால் சீன நாடாகிவிடும் என்ற எதிர்வு கூறல் உடலில் அலார விளைவு களை ஏற்படுத்துகிறது.

"இவ்வளவு பிரச்சினைகள், கேள்விகள், சிக்கல்கள், பயங்களை முன்வைக்கும் கவிஞர் தீர்வு ஒன்றும் சொல்ல வில்லையா?" என்பது முக்கிய கேள்வி. சொல்கிறார். மிகச் செட்டும் செறிவுமாய் இரண்டு கவிதைகளில் அவை வருகின்றன. ஒன்று 'பரஸ்பரம்' என்ற கவிதை தரும் சேதி. பல் கலாசார நாடுகள் உலகில் பல இருக்கின்றன. பலவேறு மொழி, பலவேறு சமயம், மிகமிக வித்தியாசமான கலாசாரங்கள் - எல்லாவற்றுடனும் அவை நிம்மதியாய் இருக்கின்றன. அவுஸ்திரேலியா, சிட்னியில் உள்ள பாடசாலைகளில் இடைநிலை வகுப்புகள் வரை சமயபாட நேரத்தில் ஒன்பது, பத்து சமயங்கள் ஒரே நேரத்தில் சமாந்தரமாகக் கற்பிக்கப் படும். இங்கே ஆக இரண்டே இரண்டு மொழி! ஒன்றுக்கொன்று நிறைய ஒற்றுமை கொண்ட, ஒரே இலக்கண அமைப்புக்கொண்ட மொழி! பல ஒற்றுமைகள் கொண்ட கலாசாரம், சடங்குகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் பிரச்சினை? அந்தக் கவிதையைப் புரிந்துகொண்டவர் மனதில் சமாதானம் ஏற்படும். தனிமனித மனத்தின் சமாதானம் நாட்டின் சமாதானமாகும்.

இரண்டாவது தீர்வு 'பரோபகாரம்' என்ற கவிதையூடு வருகிறது.

*"யாரைச் சேர்கின்றது எனத் தெரிந்தா*
*பசு*
*பால் கொடுக்கின்றது!*

*யாருக்கு உணவாகின்றது எனத் தெரிந்தா*
*பயிர்*
*பயன் கொடுக்கின்றது!*

*யாருக்கு வழியாகின்றது எனத் தெரிந்தா*
*வீதி*
*விட்டுக் கொடுக்கின்றது!*

*யாரைக் குளிர்விக்கின்றது எனத் தெரிந்தா*
*வானம்*
*வாரிப் பொழிகின்றது!..."*

உளவியல் சிகிச்சை முறைகளில் மிக நவீனமானது *ACT (Acceptance Committment Therapy)* எனப்படும். இன்றைய எமது நிலையை ஏற்றுக்கொண்டு எமது கடமைகளை அர்ப்பணிப்பு டனும் விழுமியம் தவறாமலும் செய்வதே மன நலத்துக்கான வழி என்று விரிவாக அது பேசும். "யாரைக் குளிர்விக்கிறோம் எனத் தெரிந்தா வானம் வாரிப் பொழிகின்றது?" என்று அடிகள் கேட்கிறார். என்ன விளைவு வரும் என்று அக்கறைப்படாமலே இயல்பாக நல்லதைச் செய்யும் பண்பு மனிதருக்கு வாய்க்கும்போது மட்டுமே இந்த நாட்டில் அமைதி ஏற்படும். அந்தத் தெளிவோடு கவிதைத் தொகுதியை மூடுகிறோம்.

மனுவுக்கு மனுச் செய்த அடிகளார் இன்னும் இன்னும் ஏராளம் கலைப் பணியும் மானிட சேவையும் புரிய இறை அருள் துணை நிற்கும், நிற்க வேண்டும் என வேண்டி நிறைவு செய்கிறேன். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைந்த மனிதத்தை சீரமைக்கும் கவிதைத்தொகுதி

ஈழத்துக் கவிதை மரபானது காலத்துக்குக் காலம் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் மாற்றங்களைக் கொண்டதாகக் காணப்பட்டு வந்துள்ளது. ஈழத்தின் கடந்த ஐம்பது ஆண்டு காலக் கவிதைகளை நோக்கும்போது போருக்கு முன்னரான கவிதைகள், போர்க்காலக் கவிதைகள், போருக்குப் பின்னரான கவிதைகள் என வகைப்படுத்திப் பார்க்கலாம். போருக்குப் பின்னரான கவிதை கள் போரின் வடுக்களைத் தாங்கியதாகவும், அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் மீள் கட்டுமானங்களை வலியுறுத்துவதாகவும் சிதைந்த மனிதத்தைக் கட்டியெழுப்புகின்ற சிந்தனைகளைத் தாங்கியதாகவும் வெளிவருகின்றது. இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்ற வகையில் இந்நிலை தவிர்க்க முடியாத தொன்றாகும். இந்த வகையில் அருள்தந்தை செ.அன்புராசா அவர்களின் 'மனுவுக்கு மனு!' என்னும் கவிதைத் தொகுதியானது இன்னும் அழுத்தமாக இதைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

இக்கவிதைத் தொகுதிக்கு வழங்கப்பட்ட தலைப்பே இக்கவிதைத் தொகுதிக்கு ஆழமான கருத்தைக் கொடுத்து நிற்கின்றது. நூலை அலங்கரிக்கின்ற எழுபத்தொன்பது கவிதைகளும் பல்வேறு கோணங்களில் நின்றுகொண்டு மனித நடத்தைகளை ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. புதுக் கவிதை மரபில் சொல்லவரும் கருத்துக்களை அழுத்திக் சொல்வதற்கு கையாளப்படுகின்ற படிமங்கள், குறியீடுகள் சிறப்பானவையாகும். இக்கவிதைத் தொகுதியில் அவை சிறப்பாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

**திருமதி ஜெயக்கெனடி மேரி மக்டலின்**
ஆசிரிய ஆலோசகர் - தமிழ்,
வவு/வடக்கு கல்விவலயம், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உண்மையாகச் சொல்வது உண்மைதானா?' என்ற கவிதையானது ஒவ்வொரு சம்பவங்களை விபரிப்பதுடன் வெவ்வேறு களங்களில் நடந்த நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவதனூடாக, தான் எடுத்துக்கொண்ட பொருளை மிகவும் தெளிவாகச் சுவைபட அமைத்திருப்பது புதுமையானது.

*" 'உங்களின் வாக்குகளை எங்களுக்களித்தால்*
*வாழ்வு வந்தமாகும்'*
*சொல்கின்றான் அரசியல்வாதி!*
*'எங்களின் வாக்குகள் எப்போதும் உங்களுக்குத்தான்'*
*கூறுகின்றான் வாக்காளன்!*
*இவர்கள் உண்மையாகச் சொல்வது*
*உண்மையில் உண்மைதானா?"*

என்ற கவிதை வரிகளினூடாக மக்களின் அரசியலும் அரசியல் வாதிகளின் அரசியலும் நாசூக்காக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சாக்கடையான சந்தர்ப்பவாதங்களை இக்கவிதை சாடிநிற்கின்றது.

'உன் 'இந்தா'வின் காலம் எவ்வளவோ?' என்ற கவிதை யானது ஆண்டு, மாதம், வாரம், நாள் என ஏமாற்றிச் செல்லும் மனிதர்களின் கீழ்த்தரமான நடத்தைக் கோலங்கள் மிகவும் ஆழமான பொருளில் 'இந்தா'வின் காலம் என்ற புதிய தொடர் மூலம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளமை மனிதர் மீது கொண்டுள்ள கோபம் நயமாக வெளிவருவதாக அமைந்துள்ளது.

*"ஒருவனை முந்தி இன்னொருவன்!*
*அவனை முந்தி மற்றொருவன்!*
*அவனையும் முந்தி வேறொருவன்!*
*இப்படி,*
*முந்தி முந்தி முந்திச் சென்று*
*முந்தி விடுகிறார்கள் சிலர்!*
*முப்பது, நாற்பது, ஐம்பது ஆண்டுகள்!"*

என்ற கவிதை வரிகள் இன்று அதிகமாகக் கோடிட்டுக் காட்டப்படுகின்ற வீதி விபத்துக்கள் தொடர்பான பார்வையாக அமைந்துள்ளது. இந்த அவசரமான உலகில் வேகமாகச் செல்லும் மனிதர்கள் வேகத்துடன் சேர்த்து தம் ஆயுளையும் மிகமிக வேகமாக முடித்து விடுகின்றார்கள். குறிப்பாக இளம்வயதினர் தமது ஆயுட்காலத்தை பரிதாபமாக முடித்துக் கொள்ளும் நிலை மிக வேதனையுடன் எடுத்துக் காட்டப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"'அவளின்*
*நடை சரியில்லை!'*
*பின்*
*'உடை சரியில்லை!'*
*அதன்பின்*
*'வாய் சரியில்லை!'*
*நாள் போக*
*'வளர்ப்பு சரியில்லை'*
*என்கிறாய்!...*

*அவ்வாறாயின்*
*நடையைப் பயிற்றுவித்து*
*உடையைத் தயாரித்து*
*வாயை வடிவமைத்து*
*வேண்டிய பொம்மையை*
*நீயே*
*வார்த்து*
*வடிவமைத்து*
*துணையாக*
*வைத்துக்கொள்ளலாமே!"*

என்ற 'பொம்மைத் துணை' தலைப்பில் அமைந்த கவிதை பெண்ணடிமைத்தனத்தைச் சுட்டிநிற்கும் சிந்தனைகளைக் கொண்டதாக எடுத்துக் காட்டப்படுகின்றது. வழமையாக பெண்ணடிமை தொடர்பான கருத்துக்களை முன்வைத்தபோதும் பொம்மைகளைச் செய்து துணையாக வைத்துக் கொள்ளலாமே என்று கூறுவதனூடாக பெண்களை குறைசொல்லித் திரியும் ஆண்களை வெட்கித் தலைகுனிய வைத்துள்ளது.

'ஒருத்தருக்கும் ஓதிப்போடாத உனக்கு மட்டும்தான்!' என்ற கவிதை நாடகப் பாங்கில் அமைந்த கவிதை வடிவமாகக் காணப்படுகின்றது. பாத்திரங்கள் உரையாடுவதனூடாகச் சொல்ல வந்த விடயத்தை மிகவும் சுவையாக எடுத்துக் காட்டுகின்றார். மிகவும் எளிமையான பேச்சு மொழிப்பயன்பாடு சாதாரண மக்களுக்கும் விளங்கும் வகையில் அமைந்துள்ளது. சாதாரணமாக நடை பெறுகின்ற விடயங்கள் மனக் கண்முன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஊர்க் கதைகளைக் காவித்திரியும் நபர்களைக் கேலியும் கிண்டலுமாகப் பார்க்கும் நிலை புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக் கவிதை மரபில் சாதியத்தைத் தொடாதவர்கள் எவருமில்லை! அந்தவகையில் பின்வரும் கவிதையும் அமைந் துள்ளது. "எச்சாதி உன்சாதி அச்சாதி அவன்சாதி" என்ற வரிகள் முற்றிலும் வித்தியாசமான படைப்பாக சாதி பற்றிய சிந்தனைகளை கேள்விக்குறியாக்கி உள்ளது. பாரதி தனது பாடலில் சாதி பற்றிய சிந்தனையைப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றான். "நீதி உயர்ந்த மதி கல்வி - அன்பு நிறைய உடையோர் மேலோர்."

'நவீன தலாட்டு' என்ற கவிதை இன்றைய குடும்பங்களின் நாளாந்த வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. தாயும் தந்தையும் வேலைக்குச் செல்லும் குடும்பத்தில் நாம் இருவர் நமக்கேன் இன்னொருவர் என்ற வினாவைக் கேட்பதுபோல இக்கவிதை அமைந்துள்ளது. வேலை வேலை என் ஓடித்திரியும் குடும்பங்களில் பிள்ளை வளர்ப்பு, பிள்ளை பராமரிப்பு பெரும் போராட்டமாக மாறியுள்ளது. ஆசையருமையாகப் பிள்ளைகளைப் பெற்று அன்பாக வளர்க்க வேண்டிய நிலையில் பெற்றோரின் அன்புக்காகவும் அரவணைப்புக்காகவும் ஏங்கும் குழந்தைகளின் மனநிலை இத்தாலாட்டினூடாக சுவைபட எடுத்துக் காட்டப் படுகின்றது.

'பரஸ்பரம்' என்ற கவிதையில் இனச் சமத்துவம் பற்றி பின்வருமாறு எடுத்துக் காட்டப்படுகின்றது. 'நீயும் நானும் ஆச்சரியத்தில் ஆபத்தில் ஐயோ, அம்மோ, அப்போ என்று ஒன்றைத்தான் உச்சரிக்கின்றோம்!' என மிகவும் அழகாக எடுத்துக் காட்டுகின்றார் கவிஞர்.

'எப்படித் தெரியாமல் போகும்?' என்ற கவிதையானது மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய செய்தியைப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றது.

*"நீ பிடித்த*<br>
*நீ முடித்த*<br>
*நீ வதைத்த*<br>
*நீ சிதைத்த*<br>
*வ*<br>
*ர்*<br>
*க*<br>
*ளை*<br>
*உனக்கெப்படித் தெரியாமல் போகும்?"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வினாவின் ஊடாக ஈழத்து மக்களின் வேரறுந்த நிலை எடுத்துரைக்கப்படுகின்றது.

கவிதைகளில் நிறுத்தக் குறிகள் பொருத்தமான இடங்களில் பொருத்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பானதாகும். அன்றாட கதைகள், சம்பவங்கள், உரையாடல்கள் நிதர்சனமாகப் புரியும் வகையில் கவிதைகளில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அநேகமாக கவிதைகள் வினாக்களாக அமைந்துள்ளன. இவை மனிதத்தை மீள்கட்டுமானம் செய்வதற்காக கேட்கப்படும் வினாக்களாக அமைந்துள்ளன. மனிதனை நோக்கிக் கேட்கப்பட்ட இவ்வினாக்கள் 'மனுவுக்கு மனு!' என்னும் தலைப்பை மேலும் பொருத்தப்பாடுடையதாக ஆக்கியுள்ளது.

பல்வேறுபட்ட தளங்களில் பணிசெய்தமையால் ஏற்பட்ட அநுபவ முதிர்ச்சியானது சமூகம் தொடர்பான பிரக்ஞை பூர்வமான பார்வைக்கு வழிவகுத்துள்ளது. பல்வேறு வடிவங்களில் தனது இலக்கியப் பயணத்தை தொடர்ந்து வரும் அடிகளாரின் 'மனுவுக்கு மனு!' என்ற இக்கவிதைத் தொகுதி தனிமனித, சமூக மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. பொதுவாக இவர் சொல்ல வேண்டிய விடயத்தைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லுவது வழக்கம். இந்த வகையில் இக்கவிதைத் தொகுதியும் அதையே செய்துள்ளது எனக் கருதுகின்றேன்.

பல இலக்கியப் படைப்புகளை இலக்கிய உலகிற்கு வழங்கிவரும் இவர் கவிதையையும் ஆயுதமாகப் பயன்படுத்தி இருப்பது கத்தி முனையில் நடப்பது போன்றதொரு செயற்பாடாகும். இதை மிகவும் அவதானமாகச் செய்துள்ளார். இவரது இலக்கியப் பணி மேலும் தொடரவேண்டும் எனக் கேட்பதுடன் இக்கவிதைத் தொகுதிக்கு நயவுரை எழுதக் கிடைத்த வாய்ப்புக்கு மனம் மகிழ்வடைகின்றேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுகிப்போய்க் கிடக்கும் இதயங்களை உழுதவிட முனைகிறது!

என்னைக் கடந்து செல்லும் மனிதர்களையும், என்னைச் சுற்றி நடக்கும் சம்பவங்களையும் மையமாக வைத்து என் இதயத்தை வருடிக்கொண்டும் நெருடிக்கொண்டும் இருந்தவற்றைக் கவிதைகளாக அவ்வப்போது ஆக்கி அளித்திருக்கின்றேன்.

அவ்வகையில், *2015 - 2018*ஆம் ஆண்டுவரை ஜீவநதி, ஞானம், தாயக ஒலி, நான் போன்ற சஞ்சிகைகளிலும் பாதுகாவலன் பத்திரிகையிலும் எழுதிவந்த கவிதைகளின் தொகுப்பே 'மனுவுக்கு மனு!' என்ற இக்கவிதை நூலாகும்.

தனிமனிதனாகவும், குழுவாகவும், சமூகமாகவும் மனு மனுவுடன் - மனு மனுவோடு நடந்துகொள்ளும் நிலையினை எண்ணிப் பார்த்தபோது மனிதன் ஏன் இத்தனை தூரத்திற்கு மலினப் பட்டுப்போய்க் கிடக்கின்றான் என்ற சிந்தனை என் உள்ளத்தில் எழுந்தது தவிர்க்கமுடியாது போனது!

'மனு' என்ற சொல் மனிதனையும், அதேவேளை குறை அல்லது புகார் தெரிவித்து எழுதும் கடிதத்தினையும் குறிக்கிறது.

ஆக, மனிதர் ஏனைய உயிரினங்களில் இருந்து வித்தியாசப் படுவதோடு மனிதர் மனிதருக்கிடையில் வாழும் தரத்திலும், வாழும் முறையிலும் மிகப் பாரிய வகையில் வித்தியாசப்படுகின்றனர்!

நவீனமும் நவநாகரிகமும் வளர்ந்து செல்லச்செல்ல மனிதனின் நடத்தைக் கோலங்கள் மனிதனின் இருப்புக்கு முரணான ஒன்றாகவே மாறிவருவதுபோல தெரிகின்றது.

**செ. அன்புராசா அடிகள்**
'அமைதித்தென்றல்'
உண்ணாப்புலவு,
முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால், மனுவுடன் மனு நடந்துகொள்ளும் நிலைகண்டு மனுவுக்கு ஒரு மனுக் கொடுக்கலாம் என எண்ணினேன்!

அதன் விளைவுதான் - வெளிப்பாடுதான் 'மனுவுக்கு மனு!' என்ற இக்கவிதைத் தொகுப்பாகும்!

இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் தரிசுநிலமாய் இறுகிப்போய்க் கிடக்கும் இதயங்களை உழுதுவிட முனைகின்றன; இழகிப் பண்படலாம் என்ற எதிர்நோக்கில்!

மேலும், இக்கவிதைகள், நம் அன்றாட அநுபவங்களை, நம் மனத்திரையில் படமாகக் கொண்டுவந்து நிறுத்துவதோடு தனி நபர்களின் உறங்குநிலை மனச்சாட்சியை ஒருதடவை தட்டியெழுப்பும் என்பது என் எண்ணம்!

எழுதவேண்டும் என்பதற்காக இவை எழுதப்படவில்லை! பலவேளைகளில் எழுதாமல் இருக்க முடியவில்லை என்பதால்தான் எழுதப்பட்டுள்ளன! இப்பின்னணியில் உதித்தவைதான் இத் தொகுப்பிலுள்ள நட்சத்திரங்கள்.

சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் ஏற்கனவே வெளிவந்த கவிதைகளில் சேர்த்தல் கழித்தல் செய்யப்பட்டு புதுப்பொலி கொடுக்கப்பட்டிருக்கின்றது. என் கவிதைகளை வாசித்து உற்சாகப்படுத்தும் கவிஞர் அ.அழகுராசா அவர்கட்கு என் நன்றிகள்.

இக்கவிதைகளைப் பிரசுரித்த ஜீவநதி, ஞானம், நான், தாயக ஒலி போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியர்களான திரு.க.பரணிதரன், திரு.தி.ஞானசேகரன், கலாநிதி வின்சன் பற்றிக் அடிகள், திரு.த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா) ஆகியோருக்கும் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருள்திரு. எயின்ஸிலி றொஷான், முன்னாள் ஆசிரியரான அருள்திரு. பி.ஜே.ஜெபரட்ணம் அடிகள் ஆகியோருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

மேலும், ஒரு சங்கீதக் கச்சேரிக்கு அணிசெய் கலைஞர்கள் எத்தகைய முக்கிய இடம் வகிப்பார்களோ அதுபோல பொருள் செறிந்த கருத்துக்களையும் அணிந்துரைகளையும் மனமுவந்தளித்த என் மதிப்புக்குரியவர்களான ஓய்வுநிலைப் பேராசிரியர் செ.யோகராசா, இலக்கிய வித்தகர் திருமதி கோகிலா மகேந்திரன், ஆசிரிய ஆலோசகரும் கவிஞருமான திருமதி. ஜெயகெனடி மேரி மக்டலின்(மாலினி) ஆகியோருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இந்நூலை ஒப்புநோக்கி திருத்தங்களை மேற்கொண்ட கவிஞர் அ.அழகுராசா, அருள்சகோதரி ஜொயிஸ் மாறி, அ.கா., ஆகியோருக்கும் என் நன்றிகள். நூலை அழகுற வடிவமைக்க உதவிய கலாபூஷணம் கலையார்வன் (கு.இராயப்பு) அவர்கட்கும், அச்சேற்றிய ஜே.எஸ்.பிறின்ரஸ் ஆகியோருக்கும் என் மனம் நிறைந்த நன்றிகள்.

இம்மனு கொடுக்கும் மனுவினால், மனுவாகிய உங்களின், மேலும் ஒரு சொட்டு மனிதநேயம் மலர்ந்தால் - மனிதாபிமானம் பிறந்தால் அதுவே இந்நூலின் வெற்றி, அதுவே இந்நூலாசிரியரின் எதிர்நோக்கு! ■

*அலைபேசி : 0778 648 548*
*மின்னஞ்சல் : anpuomi1970@gmail.com*
*முகநூல் : செபமாலை அன்புராசா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


| | |
|---|---|
| நகரத்துக் குப்பைகள்! | 01 |
| உண்மையாகச் சொல்வது உண்மைதானா? | 02 |
| இவ்வாறுதான் இருந்து வருகிறோம்! | 04 |
| உன் 'இந்தா'வின் காலம் எவ்வளவோ? | 06 |
| அம்மாவை ஆபாசமாய்ப் பார்க்கிறார்கள்! | 07 |
| மாடுகள்! | 08 |
| பத்திரம்! | 09 |
| தேசப்பற்று! | 10 |
| இறுதிப் பயணம்! | 11 |
| புத்தரால் வந்த புண்ணியம்! | 12 |
| நிர்வாணம் ஆக்கப்பட்டவர்கள்! | 13 |
| நாய்களுக்குச் சுதந்திரம்! | 14 |
| அதுவே நடந்தது! | 15 |
| பிறந்தநாள் இரண்டு! | 16 |
| முந்தி விடுகிறார்கள்! | 17 |
| எப்படிப் பாதுகாப்பு! | 18 |
| ஏமாற்றம்! | 19 |
| இருப்பும் இழப்பும் | 20 |
| சிவந்தமண்! | 21 |
| யார் குற்றம்! | 22 |
| ஆச்சரியமில்லை! | 23 |
| காவல்! | 24 |
| பொம்மைத் துணை? | 25 |
| என்னதான் செய்யலாம்? | 26 |
| ஈருயிர் ஓருடல்! | 27 |
| எப்படித் தெரியாமற்போகும்? | 28 |
| 'மேட் இன் சைனா' | 29 |
| அவனும் இவனும் | 30 |
| காதலிக்கிறேன் | 31 |
| ஒருத்தருக்கும் ஓதிப்போடாத, உனக்கு மட்டுந்தான்! | 32 |
| மனித சாதி! | 34 |
| ஒன்றுமில்லாத ஒன்று! | 35 |
| கதிரைகள் கூடிக் கதைத்துக்கொண்டன! | 36 |
| ஒவ்வொருமுறையும் ஒவ்வொருமாதிரி! | 38 |
| சோசலிசமும் சாதிசமும் | 40 |
| முரண்பாடு! | 41 |
| வேண்டியவன்! | 42 |
| தாய்மார் தம் தாய்நாட்டில்! | 43 |
| தேர்தல் திருவிழா! | 44 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தவர்கள் வாழத் துடிக்கின்றார்கள்! 45
நவீன தாலாட்டு! 46
இரவும் இனிதே! 48
எவனும் அறியான்! 49
இனியாவது! 50
இழந்தவர்களிடம் இருக்கின்றது! 51
வெற்றி தோல்வி! 52
வாழ்க்கைப் பிரச்சினை! 53
மக்கு மனம்! 54
என்ன விலை! 55
அவசர வாழ்க்கை 56
கரிகாலக் கலியுகம் 57
துரத்து! 58
நாய் மட்டுந்தான்! 59
இன்றைய முரண்பாடு! 60
குப்பையா(க்)காதீர்கள்! 61
உண்மையில் நீ யார்? 62
உனக்கே நல்லாயிருக்கா? 63
யார் குப்பைகள்! 64
ஓர் அபலையின் அழுகை! 65
உணர்ந்தநாள் பிறந்தநாள் 66
மணபற்று 67
சுதந்திர நாடு? 68
தோண்டும்பணி தொடரும் 69
வேண்டுவது என்னவோ என வேண்டுகை செய்கிறேன்! 70
நடக்கும் ஆனால் நடக்காது! 72
பெறுதலும் பெறுவதும் சமன்! 73
சக்கையை வைத்துக் கொண்டோம்! 74
கேவலம்! 75
'சீறோ கஷ்சுவலிற்றி'! 76
நைலும் நந்தியும்! 77
காடு வீடாகி, வீடு காடாகி! 78
சிந்தை மாறணும்! 79
உண்மை தெரிகிறது! 80
நீதி சட்டம் ஒழுங்கு! 81
பத்திரமாய்! 82
அமாவாசை நாள்கள் அதிகமா? 83
இனியாவது சொல்லுங்கள்! 84
பரஸ்பரம்! 85
பரோபகாரம் 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
10 JUN 2020
யாழ்ப்பாணம்

## நகரத்துக் குப்பைகள்!

*9க்கு ஒருத்தி!*
*9.30க்கு ஒருவன்!*
*10க்கு இன்னொருத்தி!*
*10.30க்கு இன்னொருவன்!*
*11க்கு வேறொருத்தி!*
*11.30க்கு வேறொருவன்!*
*இப்படியே*
*இரவிரவாக*
*ஒருத்திக்குத் தெரியாமல்*
*மற்றொருத்தி*
*ஒருவருக்கும் தெரியாமல்*
*மற்றொருவன்!*
*வீசி வீசி...*
*விடிவதற்குள்*
*நகர வீதிகள்*
*நரகமாகி விடுகின்றன*
*நகரத்துக் குப்பைகளால்!*

ஞானம், ஆடி 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையாச் சொல்வது உண்மைதானா?

"ஒருத்தருக்குமில்ல
உங்களுக்குத்தான் இந்தவிலை!"
என்கிறான் கடைக்காரன்;
"கடனாகத்தான்
கடவுளாண கட்டாயம் நாளை!"
என்கிறான் கடன்காரன்!
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?

"உண்மையில் பகலிரவாய்
பாடுபட்டுழைத்தேன்!"
என்கிறார் ஆசிரியர்;
'பைபிளாண படிப்பிச்சது சரியில்ல
அதனால பாஸ்வரயில்ல!'
என்கிறான் மாணவன்;
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?

"சத்தியமாய் இலாபத்தில்
ஒருபகுதி உனக்கு!'
என்கிறான் முதலாளி;
'தலைமீதாணை
நாணயமாய் நடப்பேன்!'
என்கிறான் தொழிலாளி;
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?

செ. அன்புராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னாண உனக்காகத்தான்
நான் உயிர்வாழ்கிறேன்!'
என்கிறான் காதலன்!
'என்னாண, நான் உயிர்வாழ்வதே
உனக்காகத்தான்!'
என்கிறாள் காதலி;
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?

"பசிகிடந்து பரமனாணை பத்து நாளாயிற்று
ஒரு பத்து ரூபாய்!"
வேண்டுகிறான் ஏழை;
'இருப்பில் இல்லை
இருந்தால் இறைவனாண இழப்பேன்!'
சொல்கிறான் செல்வன்;
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?

"உங்கள் வாக்குகளை எங்களுக்களித்தால்
வாழ்வு வசந்தமாகும்!"
சொல்கிறான் அரசியல்வாதி!
"எங்கள் வாக்கு எப்போதும்
உங்களுக்குத்தான்!"
கூறுகிறான் வாக்காளன்!
இவர்கள்
உண்மை சொல்வதாகச் சொல்வது
உண்மையில் உண்மைதானா?

ஞானம், மாசி 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாறுதான் இருந்து வருகிறோம்!

'காலில்லாதவன் வருகிறான்!'
"ஆர் வந்தாலும் அசைய மாட்டம்
அப்பிடியேதான் இருப்பம்!"

'கையில்லாதவன் வருகிறான்!'
"ஆர் வந்தாலும் அசைய மாட்டம்
அப்பிடியேதான் இருப்பம்!"

'பார்வையில்லாதவன் வருகிறான்!'
"ஆர் வந்தாலும் அசைய மாட்டம்
அப்பிடியேதான் இருப்பம்!"

'கைக்குழந்தையோடு வருகிறாள்!'
"ஆர் வந்தாலும் அசைய மாட்டம்
அப்பிடியேதான் இருப்பம்!"

'கர்ப்பிணித்தாய் வருகிறாள்!'
"ஆர் வந்தாலும் அசைய மாட்டம்
அப்பிடியேதான் இருப்பம்!"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வயதானவள் வருகிறாள்!'
"ஆர் வந்தாலும் அசைய மாட்டம்
அப்பிடியேதான் இருப்பம்!"

'நோயோடு வருகிறாள்!'
"ஆர் வந்தாலும் அசைய மாட்டம்
அப்பிடியேதான் இருப்பம்!"

'மனநோவோடு வருகிறாள்!'
"ஆர் வந்தாலும் அசைய மாட்டம்
அப்பிடியேதான் இருப்பம்!"

பஸ்சில்
இவ்வாறுதான்
இற்றைவரை
இருந்து வருகிறோம்!

ஞானம், வைகாசி 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் 'இந்தா'வின் காலம் எவ்வளவோ?

கடந்த ஆண்டு,
"இந்தா வாறேன்" என்றாய்!
இதுவரையில் நீ வந்ததில்லை!

கடந்த மாதம்,
"இந்தா தாறன்" என்றாய்!
இதுவரையில் எதுவும் தந்ததில்லை!

கடந்த வாரம்,
"இந்தா எடுக்கிறன்" என்றாய்!
இதுவரையில் தொடர்பு கொண்டதில்லை!

கடந்த நாளில்,
"இந்தா பாக்கிறன்" என்றாய்!
இதுவரையில் உன் பதிலில்லை!

உன் 'இந்தா'வின் காலம்
எதுவரையோ?



செ. அன்புராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபாசமாய் அம்மாவைப் பார்க்கிறார்கள்!

*பெண்ணே!*
*5இலும் 15இலும் 25இலும் 45இலும் 65இலும்*
*'அம்மா' என்றே*
*உனை அழைப்போம்.*
*எம்மொழியிலும்*
*எப்பண்பாட்டிலும்*
*இல்லாத சிறப்பு!*
*அத்தகைய*
*உயர்வுக்கும்*
*தூய்மைக்குமுரிய உன்னை*
*ஒருசிலர்*
*ஆபாசமாய் பார்க்கிறார்களே*
*அழிந்துபோவான்கள்!*

ஞானம், கார்த்திகை 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாடுகள்!

ஒலியெழுப்பும்போது
வீதியைவிட்டு
விலகிச் செல்கின்றன
பட்டி மாடுகள்!
வீதியின் நடுவே
குறிக்கே
விலகாது
வேண்டுமென்றே நிற்கின்றன
பகுத்தறிவு மாடுகள்!

*ஜீவநதி, மார்கழி 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரம்!

'பத்திரம் பத்திரம்!' என்று
பத்திரமாய்ப் பெற்று,
'பத்திரம் பத்திரம்!' என்று
பத்திரமாய் வளர்த்து,
'பத்திரம் பத்திரம்!' என்று
பத்திரமாய் ஆளாக்கி,
பத்திரமாய் இருக்கிறான்
என் மகன் என் வீட்டில்!
வேலையேதும் தேடாமல்,
வேலையேதும் செய்யாமல்!

*ஜீவநதி, தை 2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசப்பற்று!

எங்களில் பலர்
எவ்வளவு
தேசப்பற்றுள்ளவர்கள் என்று
தேர்தல் வந்ததால்
தெரிந்தது!...



செ. அன்புராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிப் பயணம்!

*22 பேருடன் புறப்பட்டு*
*20 இடங்களுக்குமேல்*
*இடம் பெயர்ந்து,*
*ஏதிலிகளாய் திரிந்து,*
*இறுதியில்,*
*பிணங்களோடு பிணங்களாகி*
*02 பேர் மட்டும் திரும்பினோம்!*
*நடைப் பிணங்களாய்!*

***ஜீவநதி, புரட்டாதி 2015***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தரால் வந்த புண்ணியம்!

நண்பா!
நம் நாட்டிற்கு,
புத்தரால் வந்த புண்ணியம் ஒன்றுண்டு!
ஒவ்வொரு பௌர்ணமியையும்
விடுமுறை ஆக்கிவிட்டார்!
அன்பு அகிம்சை கருணை காருண்யமெல்லாம்
அமாவாசையாகத்தான் இன்றும் இருக்கிறது!

***ஜீவநதி, ஆவணி 2015***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

131860C
KOHA
JPL

276732

## நிர்வாணம் ஆக்கப்பட்டவர்கள்!

ஆடை இன்றியோ
ஆடை குன்றியோ
ஆடை குலைந்தோ
ஆடை களைந்தோ
அம்மணமானவர்கள் அல்ல!

ஆடை கழற்றி
நிர்வாணம் ஆக்கப்பட்டவர்கள் நாம்
ஆண்டவன் இயேசுவைப்போல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்களுக்குச் சுதந்திரம்!

உறங்கிப்போய்க் கிடக்கிறது ஊர்!
ஆனால்,
நாலாபக்கமும்
நாய்கள் மட்டும்
நடமாடித் திரிகின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதுவே நடந்தது!

*அன்று நடந்ததே*
*எங்கள் மண்ணிலும் நடந்தது!*

*இயேசுவுடன்*
*யூதாஸ்!*

*சீசருடன்*
*புறூட்டஸ்!*

*கட்டபொம்மனுடன்*
*எட்டப்பன்!*

*பண்டாரவன்னியனுடன்*
*காக்கைவன்னியன்!*

*எது நடந்ததோ*
*எங்கள் மண்ணிலும்*
*அதுவே நடந்தது!...*

***ஜீவநதி, மாசி 2016***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் இரண்டு!

பிறக்கவேண்டியது ஒருநாள்!
நம்மூர்களில்
பெண்பார்ப்பதுபோல
எண் பார்த்ததால்
என்னைப் பிறப்பித்ததோ
இன்னொருநாள்!
ஆக,
பிறந்தநாள்
எனக்கு இரண்டுநாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முந்திவிடுகிறார்கள்!

ஒருவனை முந்தி இன்னொருவன்!
அவனை முந்தி மற்றொருவன்!
அவனையும் முந்தி வேறொருவன்!
இப்படி,
முந்தி முந்தி முந்திச் சென்று
முந்தி விடுகிறார்கள் சிலர்!
முப்பது, நாற்பது, ஐம்பது ஆண்டுகள்!

*ஜீவநதி, மாசி 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படிப் பாதுகாப்பு!

பசுக்களின் பாதுகாப்பு
சிங்கங்களின் 'பந்தோபஸ்தில்'!

ஆடுகளின் 'சேவ்ரி'
ஓநாய்களின் 'செக்குறிற்றி'யில்!

*ஜீவநதி, மாசி 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமாற்றம்!

*மனமே!*
*'ஒரு முறைதான்!'*
*'இந்த முறைதான்!'*
*'ஒரே ஒருமுறை மட்டும்தான்!' என*
*எத்தனை முறை*
*என்னை நீ*
*ஏமாற்றிவிட்டாய்!*

*ஜீவநதி, ஆனி 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருப்பும் இழப்பும்!

நந்திக் கொடி
எங்கள் அடையாளம்!
நந்திக் கடல்
எங்கள் வரலாறு!

கொடியுமுண்டு.
கடலுமுண்டு.

அடையாளமும்
வரலாறும்?



செ. அன்புராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசனநூலகம்
10 JUN 2020
யாழ்ப்பாணம்

## சிவந்த மண்!

எங்கு கொத்தினாலும்
சிவந்த மண்!

புரிந்தது!

எங்கள் மண் சிவந்தது
செம்மண் என்பதால் மட்டுமல்ல
செந்நீரும் சேர்ந்தது என்பதால்!

*ஜீவநதி, ஆனி 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் குற்றம்!

அவள்
குற்றத்தில் பிறந்தவளாம்!

செவ்வாய்
குற்றத்தில் பிறந்தவளாம்!
சுற்றம்
குற்றம் சுமத்துது!

அவள்
குற்றத்தில் பிறந்தவளாம்!

இது யார் குற்றம்?

ஜீவநதி, ஆனி 2016

செ. அன்புராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆச்சரியமில்லை!

துயிலுமில்லங்களில்
தூங்குபவர்களையே
துரத்தும் அவர்கள்
எம் வாழ்விடங்களை
வசப்படுத்தியிருப்பது
ஒன்றும் ஆச்சரியமில்லையே!

*ஜீவநதி, புரட்டாதி 2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவல்!

துயில்பவர்களையும்
துப்பாக்கி முனையில்
வைத்திருப்பதற்கா
துயிலுமில்லங்களுக்குத்
துப்பாக்கிகள்
வழங்கப்பட்டன?

*ஜீவநதி, புரட்டாதி 2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொம்மைத் துணை?

*'அவளின்*
*நடை சரியில்லை!'*
*பின்*
*'உடை சரியில்லை!'*
*அதன்பின்*
*'வாய் சரியில்லை!'*
*நாள் போக*
*'வளர்ப்பு சரியில்லை'*
*என்கிறாய்!...*

*அவ்வாறாயின்*
*நடையைப் பயிற்றுவித்து*
*உடையைத் தயாரித்து*
*வாயை வடிவமைத்து*
*வேண்டிய பொம்மையை*
*நீயே*
*வார்த்து*
*வடிவமைத்து*
*துணையாக*
*வைத்துக்கொள்ளலாமே!*

***ஜீவநதி, ஐப்பசி 2016***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னதான் செய்யலாம்?

ஆதரவு அற்றவர்க்கு ஏதாவது செய்யலாம்!
அகதி ஆனவர்க்கும் ஏதாவது செய்யலாம்!

ஏழை எளியவர்க்கு ஏதாவது செய்யலாம்!
இல்லாதவர்க்கும் ஏதாவது செய்யலாம்!

உடல் நொந்தவர்க்கு ஏதாவது செய்யலாம்!
உளம் உடைந்தோர்க்கும் ஏதாவது செய்யலாம்!

பார்வை அற்றவர்க்கு ஏதாவது செய்யலாம்!
நடக்க ஏலாதவர்க்கும் ஏதாவது செய்யலாம்!

கேட்க இயலாதவர்க்கு ஏதாவது செய்யலாம்!
பேசமுடியாதவர்க்கும் ஏதாவது செய்யலாம்!

நினைவை இழந்தவர்க்கு ஏதாவது செய்யலாம்!
நிம்மதி குலைந்தவர்க்கும் ஏதாவது செய்யலாம்!

நித்திரைவராதவர்க்கு ஏதாவது செய்யலாம்!
நித்திரைபோல் நடிப்பவர்க்கு என்னதான் செய்யலாம்!?

*ஜீவநதி, ஆனி 2017*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈருயிர் ஒருடல்!

எமக்கிடையில்
வெற்றியென்ன தோல்வியென்ன
இரண்டும் ஒன்றுதான்!

என்னை நீ வெல்கிறாய்!
ஏனெனில்
உன்னிடம் தோற்பதற்கு
என்னிடம் ஒன்றுமில்லை!

உன்னிடம் நான் தோற்கிறேன்!
காரணம்
என்னிடம் இழப்பதற்கு
உன்னிடம் ஒன்றுமில்லை!

எமக்கிடையில்
வெற்றியென்ன தோல்வியென்ன
இரண்டும் ஒன்றுதான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படித் தெரியாமற்போகும்?

உனக்கெப்படித்
தெரியாமற்போகும்?

நீ பிடித்த,
நீ முடித்த,
நீ வதைத்த,
நீ சிதைத்த,
வ
ர்
க
ளை...

உனக்கெப்படித்
தெரியாமற்போகும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘மேட் இன் சைனா’

ஈரைந்து ஆண்டுகள்
இடைவிடாத் தவத்தினால்
பெற்றனர் ஓர் பிள்ளையை!

குழுமினர் குடும்பத்தினர்!
குதூகலித்தனர் சுற்றத்தினர்!
கோபுரம்போல் குவிந்தன
பரிசுப் பொருள்கள்!

ஊடறுத்துப் பார்த்த கண்கள்
ஒன்றைமட்டும்
உன்னிப்பாய் உணர்த்தின!
குழந்தையைத் தவிர
மற்ற அனைத்தும்
‘மேட் இன் சைனா!’

நாட்டில்
சீனர் நடமாட்டத்தை
அவதானிக்கும்போது,
காலப்போக்கில்
‘அதற்கும்’ என்னாகுமோ! என
ஏங்குகிறது மனம்!

*ஜீவநதி, மார்கழி 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவனும் இவனும்!

“மரமேறி ‘யூஸ்’ எடுப்பது
என்னப்பனின் தொழில்!”
கேட்ட வெளிநாட்டவன்
‘ஒரு விஞ்ஞானியின் மகள்’ எனக்
கணக்கிட்டுக் கொண்டான்!
நம் நாட்டவனோ,
‘சீவிறவன் மகள்’ என
முகம்சுழித்துக் கொண்டான்!
காரணம்;
அவன்,
விஞ்ஞான பூர்வமாகச் சிந்திக்கின்றான்!
இவன்,
மெய்ஞ்ஞானமில்லாமல் யோசிக்கின்றான்!

செ. அன்புராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலிக்கிறேன்!

*நான் உன்னைக்*
*காதலிக்கிறேன்.*

*காதலியாகவும் அல்ல!*
*துணைவியாகவும் அல்ல!*

*ஆயினும்*
*நான் உன்னைக்*
*காதலிக்கிறேன்!*

***ஜீவநதி, ஆவணி 2017***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருத்தருக்கும் ஓதிப்போடாத, உனக்கு மட்டும்தான்!

அடியேய்...
அறிஞ்சனீயே!...

உவள் உமாவல்லே
ஓடிப்போட்டாளாம்!...
ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள் நமக்கேன்?

உவன் சிவாமுடிச்சது
நம்ம சாதிசனமில்லையாம்!...
ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள் நமக்கேன்?

உவன் சுதா வெளிநாட்டில
உது ஊரூராய் திரியிதாம்!...
ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

ஊர்க்கதையள் நமக்கேன்?
உவன் சதா கடன்பட்டுத்தான்
கல்யாணம் செய்யிறானாம்!...
ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள் நமக்கேன்?

உவள் கலா காக்கா பிடிச்சித்தான்
தன்காரியம் பாத்தாளாம்!
ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள் நமக்கேன்?

இப்படியே,
ஒருத்தர் விடாமல்
ஒவ்வொருவருக்கும்
ஓதப்படும் மந்திரம்தான்;
'ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள் நமக்கேன்?'

*ஜீவநதி, ஐப்பசி 2017*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித சாதி!

'எச்சாதி இவன் சாதி?'
என்றொருவன் எனைக் கேட்டான்!

'எச்சாதி இவன் சாதி' எனப் பார்த்தா
வைத்தியம் செய்கிறாய்?

'எச்சாதி இவன் சாதி' எனப் பார்த்தா
இரத்ததானம் கேட்கிறாய்?

'எச்சாதி இவன் சாதி' எனப் பார்த்தா
நல்லாசிரியனைத் தேடுகிறாய்?

'எச்சாதி இவன் சாதி' எனப் பார்த்தா
சலுகைக்காய் ஏங்குகிறாய்?

'எச்சாதி இவன் சாதி' எனப் பார்த்தா
உதவிக்கு அழைக்கிறாய்?

'எச்சாதி இவன் சாதி' எனப் பார்த்தா
கடனுக்காய் கையேந்துகிறாய்?

'எச்சாதி இவன் சாதி' எனப் பார்த்தா
வாக்குப் பிச்சை கேட்கிறாய்?

'எச்சாதி இவன் சாதி?' என்றவருக்கு
"எச்சாதி உன் சாதி
அச்சாதி அவன் சாதி"
என்பதுதான் என் பதில்!

*ஜீவநதி, தை 2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றுமில்லாத ஒன்று!

"ஏன் ஒருமாதிரி?"
'ஒண்டுமில்ல!'
உடம்புக்கு ஏதும்?"
'ஒண்டுமில்ல!'
"ஏதும் பிரச்சினையா?"
'ஒண்டுமில்ல!'
"வேறேதும்?"
'ஒண்டுமில்ல!'

அவளுக்குள்
இருக்கிறது
ஒன்றுமில்லாத ஒன்று!

*நான், தை - பங்குனி 2017*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரைகள் கூடிக் கதைத்துக் கொண்டன!

'நம்மைக் கைப்பற்ற;
எத்தனை பொய்கள்,
எத்தனை புளுகுகள்,
எத்தனை 'புறொமிசு'கள்,
எத்தனை புழுடாக்கள்!
இன்னும், எத்தனை எத்தனை எத்தனை...!'
கதிரைகள் கூடிக்
கதைத்துக் கொண்டன!

'நம்மைக் கைப்பற்றியபின்;
எத்தனை அந்தஸ்துக்கள்,
எத்தனை அதிகாரங்கள்,
எத்தனை செல்வங்கள்,
எத்தனை செல்வாக்குகள்!
இன்னும், எத்தனை எத்தனை எத்தனை...!'
கதிரைகள் கூடிக்
கதைத்துக் கொண்டன!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நம்மையிழப்பின் மீண்டும் கைப்பற்ற;
எத்தனை இலட்சங்கள்,
எத்தனை சூட்சுமங்கள்,
எத்தனை நகர்த்தல்கள்,
எத்தனை நாடகங்கள்!
இன்னும், எத்தனை எத்தனை எத்தனை..!'
கதிரைகள் கூடிக்
கதைத்துக் கொண்டன!

'இதுவரையில் எத்தனை எத்தனை
எத்தனைபேர் இருந்துவிட்டனர்!
இனிமேலும் எத்தனை எத்தனை
எத்தனைபேர் இருக்கவுள்ளனர்!
அத்தனையில் எத்தனை
உண்மையாய் உழைத்திருக்கின்றனர்?'
கதிரைகள் கூடிக்
கதைத்துக் கொண்டன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒவ்வொரு முறையும்
## ஒவ்வொரு மாதிரி!

ஒருமுறை ஆசைப்படுகிறாய்
மறுமுறை அலட்சியப்படுத்துகிறாய்!
ஒருமுறை விரும்புகிறாய்
மறுமுறை விமர்சிக்கிறாய்!
ஒருமுறை சரியென்கிறாய்
மறுமுறை பிழையென்கிறாய்!
ஒருமுறை நல்லதென்கிறாய்
மறுமுறை கெட்டதென்கிறாய்!
ஒருமுறை உண்மை பேசுகிறாய்
மறுமுறை பொய் சொல்கிறாய்!
ஒருமுறை மகிழ்ச்சிப்படுத்துகிறாய்
மறுமுறை துன்புறுத்துகிறாய்!
ஒருமுறை ஆதரவளிக்கிறாய்
மறுமுறை கண்டனம் தெரிவிக்கிறாய்!
ஒருமுறை முன் நிற்கிறாய்
மறுமுறை பின் வாங்குகிறாய்!
ஒருமுறை உறுதியாய் இருக்கிறாய்
மறுமுறை தளர்ந்துபோகிறாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை துணிவாயிருக்கிறாய்
மறுமுறை அஞ்சுகிறாய்!
ஒருமுறை அன்பு காட்டுகிறாய்
மறுமுறை அதட்டுகிறாய்!
ஒருமுறை நற்குணத்துடன் பழகுகிறாய்
மறுமுறை பிறவிக் குணத்தைக் காட்டுகிறாய்!
ஒருமுறை ஒருமாதிரித் தெரிகிறாய்
மறுமுறை இன்னொரு மாதிரித் தோன்றுகிறாய்!
இப்படியே...

மனமே, யார் நீ?
எங்கிருக்கிறாய்?
ஏனிப்படி இருக்கிறாய்?

சொல்வாயா?
அன்றேல்
தொடர்கதையாய்த் தொடர்ந்து செல்வாயா?

நான், தை – பங்குனி 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோசலிசமும் சாதிசமும்!

எங்கள் நாட்டில்தான்
கூடியிருந்து
குடிக்கும்போது
'சோசலிசம்' பேசுவார்கள்!
விடிந்ததும்
வெறிமுறிந்ததும்
'சாதிசம்' பார்ப்பார்கள்!

*ஜீவநதி, தை 2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரண்பாடு!

நிலாவை நேசிக்கும் நீ
ஒளியை ஏன்
வெறுக்கிறாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டியவன்!

நானிருக்கும் இடத்தில்
அவன் இருந்திருந்தால்
வேண்டியவை கிடைத்திருக்கும்!
ஏன்
அவன்
வேண்டாதவையும் கிடைத்திருக்கும்!
ஏனெனில்
அவன் வேண்டியவன்!
...!

பாதுகாவலன், *18.10.2015*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மார் தம் தாய்நாட்டில்!

*பெற்ற பிள்ளைகள்*
*என்ன ஆனார்களோ என*
*அறிவதற்கு,*
*ஆறாண்டுகள் கடந்தும்*
*அலைந்து திரிகிறார்கள்*
*தாய்மார்கள்*
*தம் தாய்நாட்டில்!*

பாதுகாவலன், *18.10.2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் திருவிழா!

திருவிழாக் காலங்களில்
சாமி சுற்றுகிறார்கள்!
தேர்தல் காலங்களில்
ஆசாமிகள் சுற்றுகிறார்கள்!

சாமி சுற்றுகிறார்கள்
வரம் பெறுவதற்கு;
ஆசாமிகள் சுற்றுகிறார்கள்
வாக்குப் பெறுவதற்கு;

திருவிழாமுடிந்ததும்
சாமி மூலஸ்தானத்தில்!
தேர்தல் முடிந்ததும்
ஆசாமிகள் முருங்கை மரத்தில்!

மீண்டும் வேதாளம்...
கதை பேச...

பாதுகாவலன், *16.08.2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழந்தவர்கள் வாழத் துடிக்கின்றார்கள்!

*இழந்தவர்கள்*
*வாழத் துடிக்கின்றார்கள்!*
*இருக்கின்றவர்கள்*
*சாக நிற்கின்றார்கள்!*

*இழந்தவர்களிடம்*
*இருக்கின்றது!*
*இருக்கின்றவர்கள்*
*இழந்துபோகின்றார்கள்!*

*ஏனெனில்*
*தாழவோ*
*வீழவோ*
*மாழவோ அல்ல...*
*வாழப் பிறந்தவர்கள் அவர்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன தாலாட்டு!

கண்ணே!...
என் காவாலிப் பயலே (மகளே)!
காது கிழியக் கத்தாதேயடா(டி)!
நீ முளிக்கும் முன்பே உன்னம்மா
வெளிக்கிட்டு வேலைக்கு ஓடிட்டா!
என்னால்
என்ன செய்ய ஏலும்?
அம்மாவைக் கேட்டளாதே
அவ அஞ்சு மணிக்குத்தான்!
அப்பாவைக் கேட்டளாதே!
அவர் அவவுக்குப் பிறகுதான்!
அண்ணா, அக்கா, தம்பி, தங்கை
இருந்தால்தானே அவர்களை நீ கேட்க?
உன்னை, ஒன்றை, ஒன்றே ஒன்றைப்
பெற்றுவிட்டே
ஒப்பாரி வைக்கிறாள் உன்னாத்தை!
கண்ணே!
கத்திக் கத்திக்
களைத்துப் போகாதேயடா(டி)!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில்
கரைத்து வைத்த பால் இருக்கிறது!
உனக்காக்கிய சாப்பாடு 'பிறிஜில்' இருக்கிறது!
அதற்கிடையில்
'கக்கா' செய்திடாதே கண்ணே!
இல்லையென்றால்
'பம்பஸ்' சோடுதான் படுத்துறங்குவாய்!

மீறினால்,
உன்னம்மா வந்துதான்
அதனை அவுட்டெறிவாள்!
கண்ணே!
கத்திக் கத்திக் களைத்துப் போகாதேயடா(டி)!
கத்திய களைப்பிலேனும்
கண்ணுறங்கடா(டி) என் செல்வமே!

*அதிர்வுகள், பக். 105-106*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவும் இனிதே!

இரவை ஏன்
வெறுக்கிறாய்?
இரவில்லாத பகல்
இனிதா?



செ. அன்புராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எவனும் அறியான்!

அவன்
'புத்தர் பூமி' என்கிறான்.
இவன்
'சிவபூமி' என்கிறான்.
அடுத்தவன்
'ஆதாமின் அடி' என்கிறான்.
ஆனால்,
இப்பூமி
அவனுக்குரியது என்பதால்
எவனுக்கும் உரியதல்ல என்பதை
அவனும் அறியான்!
இவனும் அறியான்!
எவனும் அறியான்!

*தாயக ஒலி, தை - மாசி 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியாவது!

தெற்கில் வெடித்தபோது
நான் இரசித்தேன்!

வடக்கில் வெடித்தபோது
நீ இரசித்தாய்!

மொத்தத்தில்
நம் தேசம் அழிந்தபோது
யார் இரசித்தார்?

உணர்வோமா,
இனியாவது உண்மையை!

*தாயக ஒலி, தை- மாசி 2016*

**செ. அன்புராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழந்தவர்களிடம் இருக்கின்றது!

இங்கே,
பார்த்துப் பார்த்தும்
சரியாகக் காண்பதில்லை!
கேட்டுக் கேட்டும்
தெளிவாகப் புரிவதில்லை!
சொல்லிச் சொல்லியும்
முழுதாய் விளங்குவதில்லை!

அங்கே,
பார்வை இழந்தவர்
ஒழுங்காகவே நடக்கின்றார்!
காது கேளாதவர்
விளக்கமாகவே இருக்கின்றார்!
வாய் பேசாதவர்
சரியாகவே சொல்கின்றார்!

*தாயக ஒலி, புரட்டாதி – ஐப்பசி 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி தோல்வி!

பந்தயத்தில்
பரீட்சையில்
விளையாட்டில்
விவசாயத்தில்
வியாபாரத்தில்
வாழ்க்கையில்
ஒன்றே இலக்கு!
முன்னேறுவதும்
முன்நகர்வதும்!

வெற்றி -
பெற்றுக்கொண்டு முன்னேற!
தோல்வி -
கற்றுக்கொண்டு முன்நகர!

ஆக,
வெற்றி தோல்வி
இரண்டின் இலக்கும் ஒன்றே!
முன்னேறுவதும் முன்நகர்வதும்!



செ. அன்புராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைப் பிரச்சினை!

*வாழ்க்கைப் பிரச்சினைகள்*
*வந்து வந்து போகலாம்*
*வளர்ந்துகொண்டும் போகலாம்!*
*யாருக்கும்*
*வாழ்க்கையே பிரச்சினையாய்*
*ஒருபோதும்*
*வந்துவிடக் கூடாது!*

*வாழ்வதன் பிரச்சினையை*
*'வாழ்க்கையே பிரச்சினை!' என்றாக்கி*
*வாழ்க்கை முழுவதும்*
*பலரின்று*
*வீணே வாடி வதங்குகிறார்!*

*தாயக ஒலி, புரட்டாதி - ஐப்பசி 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கு மனம்!

*மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் செல்கிறது!*

*'இன்னும்' என்கிறது!*
*மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் ஓடுகிறது!*

*'இன்னும் கொஞ்சம்' என்கிறது!*
*மணிக்கு 90 கி.மீ. வேகத்தில் கூடுகிறது!*

*'இன்னும் போகலாம்' என்கிறது!*
*மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் பறக்கிறது!*

*முட்டிமோதிக் கவிழ்ந்த பின்*
*'மெதுவாகவே போயிருக்கலாம்' என்கிறது*
*மக்கு மனம்!*

*தாயக ஒலி, 25வது இதழ், 2017*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன விலை!

*"எகிறிக்கொண்டு போகிறது!"*
*'என்ன?'*
*"விலை!"*
*'எதற்கு?'*
*"மகனுக்கு!"*
*'என்னத்திற்கு?...'*
*"மணமகனுக்கு!"*

பாதுகாவலன், *04.03.2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசர வாழ்க்கை!

அவசரத்தில் இருந்து
அவசரத்தில் பிறந்து

அவசரத்தில் படுத்து
அவசரத்தில் எழுந்து

அவசரத்தில் வளர்த்து
அவசரத்தில் வளர்ந்து

அவசரத்தில் சமைத்து
அவசரத்தில் சாப்பிட்டு

அவசரத்தில் படித்து
அவசரத்தில் எழுதி

அவசரத்தில் கண்ணசைத்து
அவசரத்தில் காதலித்து

அவசரத்தில் கதைத்து
அவசரத்தில் முடித்து

அவசரத்தில் முட்டி
அவசரத்தில் மோதி

அவசரத்தில் முடிகிறது
அவசர வாழ்க்கை!

*பாதுகாவலன், 01.04.2018*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

பொது நூலகம்
10 JUN 2020
மாநகர
யாழ்ப்பாணம்

## கரிகாலக் கலியுகம்!

*இது*
*கரிகாலந்தான்,*
*கலியுகம்தான்!*

பாலினியச் செடிகளைப்
பசளையிட்டு வளர்ப்பதால்...

களைகளை வளர்த்துப்
பயிர்களைக் களைவதால்...

புற்களைப் போற்றி
நெற்களைப் பழிப்பதால்...

ஓநாய்க் கூட்டங்களை
ஊட்டி வளர்ப்பதால்...

*இது*
*கரிகாலந்தான்,*
*கலியுகந்தான்!*

பாதுகாவலன், *01.04.2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரத்து!

போத்துக்கேயனை
ஒல்லாந்தன்!

ஒல்லாந்தனை
ஆங்கிலேயன்!

ஆங்கிலேயனை
இலங்கையன்!

இலங்கையனை
இலங்கையனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய் மட்டுந்தான்!

'நன்றிகெட்ட நாயே!' என
இனிமேலும்
இகழாதே மனிதா!
நம்மோடு வாழ்ந்துகொண்டும்
நன்றிமறவாது
இற்றைவரை இருப்பது
நானும் நீயுமல்ல!
நாய்தான்.

பாதுகாவலன், *04.03.2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய முரண்டு!

'வேண்டாம்!' என்றால்
செய்கின்றார்!
'செய்' என்றால்
'வேண்டா'மென்கின்றார்!

'கூடாது!' என்றால்
விரும்புகின்றார்!
'நல்லது' என்றால்
'கூடா'தென்கின்றார்!

'நில்!' என்றால்
செல்கின்றார்!
'செல்!' என்றால்
நிற்கின்றார்!

முரண்டு நிற்பதே - இன்று
விதியாகிப் போனது!
முரண்டு பிடிப்பதே
சரியாகி விட்டது!

*பாதுகாவலன், 01.04.2018*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குப்பையா(க்)காதீர்கள்!

‘நீ’?
“றெஸ்ரோரன்ரில் இருந்து”!
‘அப்ப நீ’?
“தேத்தண்ணிக் கடையிலிருந்து”!
‘அவன்’?
“ஆமிக் கடையிலிருந்து”!
‘இவன்’?
“பெட்டிக் கடையிலிருந்து”!
‘உவன்’?
“சின்னக் கடையிலிருந்து”!’
‘உவள்’?
பெரிய கடையிலிருந்து”!

என்ன செய்வது?
தம் வேலை முடிந்ததும்
குப்பைகள்
எங்களைக்
குப்பைகள் ஆக்கிவிட்டார்கள்!

*ஞானம், சித்திரை 2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையில் நீ யார்?

நண்பா,
உண்மையில் நீ யார்?
ஏன் இப்படிச் செய்கிறாய்?
அன்புமிக்க அயலவனாய்
அவ்வப்போது
பாற்சோறு பரிமாறுகிறாய்.
அதேவேளை,
ஆக்கிரமிக்கும் அன்னியனாய்
அடிக்கடி
அடையாள அட்டையும் பார்க்கிறாய்?
உண்மையில், நீ யார்?
உன் செயலின் பொருள்...?

*ஜீவநதி, ஆவணி 2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்கே நல்லாயிருக்கா?

நண்பா!
'வெசாக்' வந்ததும்;
எம் விருப்பம் இன்றியே,
எம்மை வழிமறித்து,
ஆளடையாளம் தெரியாமலே,
பாற்சோறு தந்து,
பழரசம் பரிமாறுகிறாய்!
'வெசாக்' முடிந்ததும்;
எம் விருப்பம் இன்றியே,
எம்மை வழிமறித்து,
ஆளடையாள அட்டை கேட்டு
பதிகிறாய்...
பரிசோதிக்கிறாய்...
இது உனக்கே நல்லாயிருக்கா?

*ஜீவநதி, ஆவணி 2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் குப்பைகள்!

பெற்றவர்களையே
பேணத் தெரியாதவர்கள்!
பெருந்தன்மையோடு
நடக்கத் தெரியாதவர்கள்!
தங்களினத்தையே
மதிக்கத் தெரியாதவர்கள்!
சொல்லுகின்றார்கள்
நாங்கள் குப்பைகளாம்!
குப்பைகள் எவையென
உணராத குப்பைகள்!

*ஞானம், சித்திரை 2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் அபலையின் அழுகை!

‘ஒப்பரேசனால்
ஒரு முலை போனது.
அடுத்ததும் அதிவிரைவில்!
இயன்றதைத் தாருங்கள்,
குழந்தைக்குப் பால்கொடுக்க!’

பாதுகாவலன், *04.03.2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்ந்தநாள்
## பிறந்தநாள்!

*பிறந்தநாள் ஒன்று!*
*ஏன் பிறந்தேன் என்று*
*உணர்ந்தநாள் இன்னொன்று!*
*ஆக*
*பிறந்தநாள் இரண்டுநாள்!*

*ஜீவநதி, பங்குனி 2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்பற்று

ஒருவனுக்கும்
சொந்தம் இல்லாததை
ஒவ்வொருவனும்
உரிமை கொண்டாடுகின்றார்!

பாதுகாவலன், *04.03.2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர நாடு?

கண்டகண்ட இடங்களில்
கண்டபடி வீசுவது...
மேற்கத்தேய நாடுகளில்,
அபராதம்!
கீழைத்தேய நாடுகளில்,
அபாரம்!
ஈழவள நாட்டினில்,
ஆயுள்வரம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோண்டும்பணி தொடரும்!?

*தோண்டும் பணி எம் மண்ணில்*
*அடிக்கடி தொடர்கிறது!*
*எண்ணையோ, இரத்தினக் கல்லோ*
*எடுப்பதற்கு அல்ல!*
*எலும்புக் கூடுகளை எண்ணுவதற்கு!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுவது என்னவோ என
## வேண்டுகை செய்கிறேன்!

*வித்தியா, நீ*
*இவ்வுலகை விட்டுப்பிரிந்து*
*நாட்கள்... வாரங்கள்... மாதங்கள்...*
*ஆகின்றன!*

*சிறகடித்துப் பறக்கவேண்டிய நீ*
*சிறகொடிந்து போனாய்!*
*விருட்சமாக வேண்டிய நீ*
*விதையாகிப் போனாய்!*

*உனக்கு அறிமுகம் இல்லாத*
*உன்னை அன்பு செய்யும் மனங்கள்கூட*
*இன்னும்தான் ஆறவில்லையெனில்*
*உன்னைப் பெற்ற தாய்*
*உடன்பிறந்த சோதரர்கள்*
*உறவாடிய உறவுகள்*
*பழகிய சகபாடிகள்*
*பயிற்றுவித்த ஆசிரியர்கள்*
*எவ்வாறுதான்!...*

*உன்னை*
*வீணாக்கியவர்களை*
*"வெட்டிச் சரிக்கவேண்டும்!",*
*"சுட்டுத் தள்ளவேண்டும்!",*
*"கட்டித் தூக்கவேண்டும்!",*
*"குத்திக் குதறவேண்டும்!"*
*என்கிறார்கள்.*
*அளிக்கப்பட்ட தீர்ப்புக்கள்*
*அத்தனையும் நியாயமானவை!*
*அதனால் நிறைவேற்றப்படலாம்!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்,
ஏன் அவர்களால்
உன்னையொரு
சகோதரியாகவோ
பிள்ளையாகவோ
குழந்தையாகவோ
அப்பாவிச் சிறுமியாகவோ
பார்க்கமுடியாது போனது?

உன்னுயிரையாவது காக்கப்
போராடிய வேளையேனும்
அந்தரித்த அனாதையாகக்கூட
அவர்களால் உன்னைப்
பார்க்கமுடியாது போனதா?

எத்தனையோ உயிர்கள் எம்மண்ணில்
இதுவரையில் போயின (போரில்),
போகின்றன (தற்கொலையில்),
இனியும் போகும் (வீதி விபத்தில்),
போயிற்றுப் போகட்டும்!

எத்தனையோ 'இன்னுயிர்'களைப்போல
உன்னுயிரும் போனது எனப் பொறுத்திருப்போம்!

ஆனால், உன்னுயிரைப் போக்கிய
விதத்தைத்தான் - விந்தயைத்தான்
இன்னும் மனம் பொறுக்குதில்லையே!

எனவேதான்,
இப்போது நீ
வேண்டுவது என்னவோ என
வேண்டுகை செய்கிறேன்!...

பாதுகாவலன், *29.07.2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடக்கும் ஆனால் நடக்காது!

இருக்கிற அரசியற் கைதிகளைக் கூட
இன்னமும் விடுவிக்காத அரசேதான்
'காணாமல் போன' உறவுகளைக்
கண்டுபிடித்துத் தரப்போகின்றது!?

வாழும் இடங்களை வசப்படுத்தி
வளமாம் நிலந்தனை
வகையோ தொகையோ இல்லாமல்
'வாழ்வெழுச்சித் திட்டம்' நடத்துகின்றது!?

மதுச்சாலை பெருக மதியுரைத்து
ஆதரிக்கும் நல்லாட்சி அரசுதான்
'போதைப் பொருளற்ற நாடெனு'
ஆக்கமுனைவதாய் ஆணை இடுகின்றது!?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
276732

## பெறுதலும் பெறுவதும் சமன்!

பெறுவதாற்தான் பிள்ளையென்று அல்ல
பெற்றாலும் அது பிள்ளைதான்!
பலர் பெறுவதால்
பெற்றோர் ஆகிறார்!
சிலர் பெற்றதாலும்
பெற்றார் ஆகிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்கையை வைத்துக்கொண்டோம்!

சிலுவையைப் பிடித்துக்கொண்டோம்,
சீடத்துவத்தை கை நெகிழவிட்டோம்!

போதியை நட்டுத்திரிந்தோம் – அப்
போதனையைப் புறந் தள்ளிவிட்டோம்!

பிறையை வைத்துக்கொண்டோம்,
பிறரன்பைக் கை விட்டுவிட்டோம்!

நந்தியைப் பறக்கவிட்டோம் – அதன்
நன்மைகளை மறந்து போனோம்!

சாரத்தை விட்டுவிட்டு
...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேவலம்!

எங்கள் பிள்ளைகள்
வேட்டையாடப்பட்டபோது
இம்மண்ணில்
தெருநாய்கள்கூட
பத்திரமாய்ப்
பாதுகாக்கப்பட்டன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சீறோ கஷ்சுவலிற்றி'!

எங்கள் மண்ணில்தான்
'சீறோ கஷ்சுவலிற்றி' இலும்
'கியுமனிரேறியன் ஒப்பறேஷன்' இலும்
ஒரு இலட்சத்திற்கும் மேல்
உயிர்கள் போயின!

*குறிப்பு: 2009இல் வன்னியில் இலங்கைப் படையினர் நடத்திய கோரத் தாண்டவத்திற்கு இட்ட பெயர்தான் 'சீறோ கஷ்சுவலிற்றி'யும், 'கியுமனிரேறியன் ஒப்பறேஷன்'னும்!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நைலும் நந்தியும்!

நைல்நதிபோல
எங்கள் நந்திக்கடலும்
இரத்தமாகியதை,
இனிமேலாவது அறிவிப்பாயா
ஐக்கிய நாடே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடு வீடாகி, வீடு காடாகி!

*ஆரம்பத்தில்,*
*எங்கள் காடுகள்*
*வீடுகளாகின!*

*அனர்த்தத்தில்,*
*எங்கள் வீடுகள்*
*காடுகளாகின!*

*ஆக்கிரமிப்பில்,*
*எங்கள் காடுகள்*
*மீண்டும் வீடுகளாகின*
*இராணுவ வீடுகளாகின!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தை மாறணும்!

கணவனை இழந்தவளை
விதவையாகவே வைத்திருக்கிறாய்!
மனைவியை இழந்தவனுக்கு
மறுமணத்தை பரிசளிக்கிறாய்!

காலம் கடந்துவிட்டது!
இல்லையேல்,
ஒருபடி மேலேறி
உடன்கட்டை ஏறுதலை
உடனே
அமுல்படுத்தியிருப்பாய்
எங்கள்
அரசபடை ஆக்கிரமிப்பைப்போல!

*ஜீவநதி, ஐப்பசி 2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மை தெரிகிறது!**

இவர்கள்,
செத்த புலிக்கும்
பயமென்பது;
அவர்கள்,
சேமக்காலையில்
தெரிகிறது!

*ஜீவநதி, ஐப்பசி 2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி சட்டம் ஒழுங்கு!

*எங்கள் நாட்டில்*
*நீதி சட்டம் ஒழுங்கு எல்லாம்*
*நீதிமன்றங்களில்தான்!...?...*

*ஜீவநதி, ஐப்பசி 2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பத்திரமாய்!**

*எங்கு வைத்தாலும்*
*எடுக்கப்படும் பணத்தை*
*புத்திரனின்*
*பாடப் புத்தகத்திற்குள் வைத்தாள்!*
*பத்திரமாய் இருந்தன*
*இரண்டும்!*

***ஜீவநதி, ஐப்பசி 2018***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமாவாசை நாள்கள் அதிகமா?

*பருவங்கள் மாறிமாறி வருகின்றன.*
*ஏனோ!*
*சிலர் வாழ்வில் மட்டும்*
*அமாவாசை நாள்கள்*
*அதிகமாகிவிட்டன!*

***ஜீவநதி, ஐப்பசி 2018***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியாவது சொல்லுங்கள்!

*நீங்கள் பிடித்தவர்களும்*
*நாங்கள் ஒப்படைத்தவர்களும் எங்கே!*

*இனியாவது சொல்லிவிடுங்கள்*
*'கொன்றுவிட்டோம்' என்று!*

*அந்தியேட்டிக் கிரிகைகளைச் செய்ய!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரஸ்பரம்!

நீ 'அம்மே' என்கிறாய்
நான் 'அம்மா' என்கிறேன்.
நீ 'அக்கே' என்கிறாய்
நான் 'அக்கா' என்கிறேன்.
நீ 'அய்யே' என்கிறாய்
நான் 'அண்ணா' என்கிறேன்.
நீ 'சகோதரயா' என்கிறாய்
நான் 'சகோதரன்' என்கிறேன்.
நீ 'தெவியனி' என்கிறாய்,
நான் 'தெய்வமே' என்கிறேன்.
நீ 'ஔவ்' என்கிறாய்,
நான் 'ஓம்' என்கிறேன்.
நீ 'ஹறி' என்கிறாய்,
நான் 'சரி' என்கிறேன்!

மேலும்,
நீயும் நானும்
ஆச்சரியத்தில் – ஆபத்தில்
'ஐயோ', 'அம்மோ', 'அப்போ'...
என்று
ஒன்றைத்தான் உச்சரிக்கிறோம்!

பிறகேன்
நீ எனை
ஏதோ 'தெமிழ' எனவும்
நான் உனை
ஏதோ சிங்களவன் எனவும்
பரஸ்பரம் பாராட்டிக் கொள்கிறோம்?

*தாயக ஒலி, தை – மாசி 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரோபகாரம்

யாரைச் சேர்கின்றது எனத் தெரிந்தா
பசு
பால் கொடுக்கின்றது!

யாருக்கு உணவாகின்றது எனத் தெரிந்தா
பயிர்
பயன் கொடுக்கின்றது!

யாருக்கு வழியாகின்றது எனத் தெரிந்தா
வீதி
விட்டுக் கொடுக்கின்றது!

யாரைக் குளிர்விக்கின்றது எனத் தெரிந்தா
வானம்
வாரிப் பொழிகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாருக்கு உதவுகின்றது எனத் தெரிந்தா*
*ஆதவன்*
*ஒளி தருகின்றது!*

*யாருக்கு வீசுகின்றது எனத் தெரிந்தா*
*தென்றல்*
*தீண்டிச் செல்கின்றது!*


*மனிதா!*
*ஏனோ நீ மட்டும்*
*ஆள் பார்த்து*
*ஆடை பார்த்து*
*அணிகலன் பார்த்து*
*இன்னும்*
*ஏதேதோ எல்லாம் பார்த்து...!*




பொதுசன நூலகம் 10 JUN 2020 யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


13186CC

# ஆசிரியரின் நூல்கள்











| | |
|---|---|
| மறைப்பணி புரிந்த மாமேதை | 2001 |
| காலத்தின் பதிவுகள் | 2002 |
| சுனாமி சொல்லாத சோகங்கள் | 2005 |
| நம்பிக்கையின் பாதையில் | 2005 |
| மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள் | 2006 |
| லூர்து நம்பிக்கை தரும் நகர் | 2010 |
| திருப்பத்திற்கான தேடல்கள் | 2013 |
| அதிர்வுகள் | 2014 |
| சிறகடிக்கும் சிட்டுக்கள் | 2016 |
| வாழத்துடிக்கும் வடலிகள் | 2017 |
| அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும் | 2018 |
| மனுவுக்கு மனு! | 2018 |
| அதிர்வுகள் - 02 | 2018 |













**இறுவட்டுகள்**

அன்புக் காணிக்கை -2000
வியாகுல இசைப்பாக்களும் வியாகுல பிரசங்கமும் - 2006
உந்தன் நினைவினிலே - 2012
என் தேசத் திருப்பாடல்கள் - 2014
சிறகடிக்கும் சிட்டுக்கள் - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் குறிப்பு!



தொன்று தொட்டு இன்று வரை
'பா' நடை மாற்றங் கண்டிருக்கின்றது.
அதனால் 'பா' இலக்கணம் மலர்ந்தது, பிரிந்தது!
பாவிற் சொன்னால்
அது ஓசைநயமாகி மனப் பாடமாகும்.
ஞாபக சக்தியை அது தந்தது, தருகின்றது.
நாளாக நாளாக மீட்கவும் உதவியது, உதவுகின்றது.
உரையும் பாட்டும் பின்னர் உடன் சேர்ந்து
'உரைப்பா'வென மலர்ந்தது.
எதுகை மோனை இணைந்த நடையாகி
வசனக் கவிதை என்றும் வலம் வந்தது.
ஆசிரியப்பா அக்காலப்பா,
புதுப்பா இக்காலப்பா!
ஆசிரியப்பாவும் வசனப்பாவும் புதுப்பாவுமாக
எது வந்தாலும்
காலங்கடந்து வாழும் பாவே கவிதை.
அது நடந்து வராது நடனமிடும்!
அலங்காரஞ் செய்து
இக்காலத்திற்கேற்ப ஆட்டங் காட்டும்.
ஆட்டங்காண அனைவரும் வருவீர்.
ஒரே மூச்சில்
அதே வீச்சில் படிக்க **'மனுவுக்கு மனு!'** தரப்படுகின்றது.
இது எண்ணத்தின் மூச்சாக
ஏறி இறங்கும் இன்றைய தரிசனம்.

'காப்பியதாசன்' உரைத்தது
இவ்வுரைப்பா!

முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்
விடயம்: கவிதை

9 789554 609044

விலை:200 ரூபா

Cover Designed & Printed
at St. Joseph's Catholic Press, Jaffna. Phone: 021 222 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org